அசல் வழக்கு எண்.188/2021 வா.சா.1 ரகு த/பெ ஆனந்தன்

**05.08.2023 குறுக்கு விசாரணை**

1. நானும் பிரதிவாதியும் ஒரே இனத்தவர் அல்லஎன்றும் ஒரே தொழில் செய்பவர்கள் அல்ல என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி கணவரை இழந்த ஒரு இளம் விதவை என்றால் சரிதான். 20.08.2019 தேதியில் தான் பிரதிவாதி எனனிடம் பணம் கேட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. அது நான் பிரதிவாதிக்கு பணம் கொடுத்த தேதி ஆகும். பிரதிவாதிக்கு நான் கடனாக கொடுத்ததாக சொல்லப்படும் தொகை ரூ.3,50,000/என்றால் சரிதான். இதற்கு முன்பு பிரதிவாதிக்கு நான் பணம் எதுவும் கொடுத்ததில்லை. இது தான் முதல் முறை என்றால் சரிதான். இதற்கு முன்பு பிரதிவாதி மீது நான் வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டு வந்தபோது யாரும் அவருடன் வரவில்லை என்றும் அவ்வாறு வந்ததாக வழக்கிலும், என் சாட்சித்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதி என்னிடம் பணம் கேட்டு வரும்போது என்னுடன் யாரும் இல்லை என்றும், அவ்வாறு இருந்ததாக நான் வழக்கிலும், சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லும் ரூ.3,50,000/-எனக்கு எவ்வாறு வந்தது என்று ஆவண ஆதாரம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தொழில் வரி, வருமானவரி, ஆகியவற்றை செலுத்துகிறேனா என்றும் அதில் இந்த கடன் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் அந்த பணம் நான் வீட்டு கடனாக பெற்ற பணமாகும் அதற்கு நான் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. அவ்வாறு நான் வீட்டு கடன் பெற்றதாக சொல்லும் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டு கடன் எதுவும் பெறவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் வீட்டு கடன் ஆவணங்களை நான் ஒப்படைக்க தயாராகஉள்ளேன். வீட்டு கடன் என் வங்கி கணக்கில் வந்ததற்கான வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

4. எனக்கு பணம் கடனாக கொடுப்பதற்கு உரிமம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு நான் பணம் கொடுப்பதற்காக யாரிடமாவது பொறுப்புறுதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிக்கு கொடுத்த பணத்திற்கு கிரய ஒப்பந்தம் அல்லது அடமானப்பத்திரம் பதிவு செய்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிக்கு ஒரே கடனுறுதிச்சீட்டின்பேரில் தான் பணம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான்.

5. என்னுடைய வாக்குமூலத்தில் பிரதிவாதிக்கு வீடு மட்டும் இருப்பதாக சொல்லி உள்ளேன். வீட்டின் மதிப்பு எவ்வளவு என்று சொல்லி உள்ளேன் என்று எனக்கு நினைவில்லை. நான் வாக்குமூலத்தில் வீட்டின் மதிப்பு ரூ.30,00,000/- என்று சொல்லி உள்ளேன் என்றால் நினைவில்லை. வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும் என்றால் சரியல்ல. நான் சொல்லி தான் தயார் செய்தார். பிரமாண வாக்குமூலத்தில் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தான் கையெழுத்து செய்தேன்.

6.நான் என்ன தொழில் செய்கிறேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. வழக்கிலும் வாக்குமூலத்திலும் நான் என்ன தொழில் செய்கிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி ஸ்ரீராம் நகரில் என் வீட்டிற்கு எதிர் வீட்டில் தான் குடியிருந்து வருகிறார். அது அவருடைய சொந்த வீடாகும்.

7. கடனுறுதிச்சீட்டில் 2% வட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அறிவிப்பில் 1.50% வட்டி கொடுத்தால் போதும் என்று சொல்லி உள்ளேன். வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை, எவ்வளவு வட்டி தொகை என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். 26.04.2021 தேதியில் தாவாவில் கையெழுத்து செய்தேன். வழக்கில் பிரதிவாதி பலருக்கு பணம் தர வேண்டுமென்றும் பல வழக்குகள் இருப்பதாகவும் சொல்லி உள்ளேன் என்றும் அந்த நபர்களை இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை.

8. பிரதிவாதியிடம் கடனை பைசல் செய்யச் சொல்லி 10 முறை கேட்டேன். அவைகள் எந்த எந்த தேதியில் கேட்டேன் என்று தாவாவில் சொல்லவில்லை. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 4வது பத்தியில் நான் பிரதிவாதியை பார்த்து தாவாவின் கடனுறுதிச்சீட்டினை பைசல் செய்யும்படி பல முறைகேட்டு பைசல் செய்வதை தொடர்ந்து தவிர்த்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதனால் நான் பிரதிவாதியிடம் பல முறை நேரடியாக கேட்டும் பைசல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(சாட்சியை குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாய்தா கேடடபோது வாதி தரப்பில் சாட்சிக்கு விடுப்பு இல்லை என்று தெரிவித்ததன்பேரில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வாதியின் வேலையை குறித்து தவறான வார்த்தைகளால் அவர் எந்த வேலையும் செய்யவில்லை என்றும் சுற்றிக்கொண்டே இருக்கிறார் என்றும் தரக்குறைவான வார்த்தைகளை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் பேசியதாக பதிவு செய்யப்படுகிறது. இந்த பதிவுடன் வாதித் தரப்பு சாட்சி தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )